சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M.முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**MCOP.No.02/2023**

மனுதாரர் தரப்பு சாட்சி எ.ம.சா.2 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. P. செந்தில்குமார், பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. புரந்தர்தாஸ் | த/பெ: திருமலை |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 26.03.2026 | தாலுக்கா : |

**முதல் விசாரணை…**

நான் இம்மனுவில் 2 ஆம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | 02.02.2022 | இறந்த மோகனின் இருச்சக்கர வாகனம் TN50-AJ-8860 | நகல் | எ.ம.சா.ஆ.2 |
| 2 | 02.02.2026 | 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் | நகல் | எ.ம.சா.ஆ.3 |
| 3 | -- | 1ம் எதிர்மனுதாரர் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை | அசல் | எ.ம.சா.ஆ.4 |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்த நபரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டிய கதிரேசன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் உரிமையாளர், ஓட்டுநர் என குறிப்பிடப்பட்டு அதற்கான தொகை ரூ.375/- செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் உரிமையாளரோ ஓட்டுநரோ இறந்தால் அதிகபட்சமாக ரூ.15,00,000/- கொடுக்கப்படும் என எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்பந்தப்படி வாகன விபத்தில் இறந்த மோகனுக்கு எங்கள் நிறுவனம் தான் காப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனம் இழப்பீடு தொகை கொடுப்பதிலிருந்து தப்பிப்பதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மனுதாரர் தரப்புகுறுக்கு விசாரணை**

1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை அனுசரிப்பதாக கூறியதன் அடிப்படையில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.